1980 பிப்ரவரி 2]

வினா எண் 2—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அண்மைக்காலத்தில் சென்னையில் வட கோடியிலும் அதனை ஒட்டியுள்ள செங்கை மாவட்ட கடலோரப் பகுதிகளிலும், கடலரிப்பின் காரணமாகப் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுவரை பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அதுகுறித்து அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) & (ஆ) வட சென்னை, இராயபுரம் மீன்பிடி துறைமுகத்தை ஒட்டிய பகுதிகளிலும் அதனை ஒட்டிய செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த நல்ல தண்ணீர் ஓடை, லட்சுமிபுரம், திருச்சின்னன் குப்பம் ஆகிய மூன்று கிராமப் பகுதிகளும் கடந்த பருவ காலத்தில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டன. இதனால் கடற்கரையை ஒட்டிய சுமார் 350 மீனவ குடியிருப்புகள் பாதிக்கப்பட்டன. மேலும், எண்ணூர் அருகே நெடுஞ்சாலையில் சுமார் 800 மீட்டர் தூரம் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது.

(இ) கடல் அரிப்பைத் தடுக்க தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதற்கு ரூ. 30.80 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு கட்டிடத்துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்தக் கடல் அரிப்பு வடசென்னையிலும், வடசென்னையை ஒட்டியுள்ள செங்கை மாவட்டக் கடற்கரையிலும் அடிக்கடி எற்படுகிறது. இதற்கு முன்புகூட பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே முறையில்தான் அமைச்சரின் செயலரும் இப்போது சொல்கிறார் ஏதோ 36 லட்சம் ரூபாயில் எஸ்டிமேட் தந்திருப்பதாகச் சொல்கிறார். இதை நடைமுறைப்படுத்த துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது முன்புபோலவே இதுவும் தூங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, இந்த அரசில் எதுவுமே தூங்காது. இந்தப் பிரச்சனையில் இதுவரை தாமதம் ஆனதற்குக் காரணம், மத்திய அரசிடம் ஒப்புதல் கேட்கப்பட்டது. ஏனென்றால் மத்திய

அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெற 1979 ஏப்ரல் மாதத்தில் எழுதப்பட்டது. ஆனால் ஜூன் 1979-ல் வெளியுறவு அமைச்சகம் அப்போதுள்ள பிரதம அமைச்சரின் ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, இந்தக் குழுவின் பயணத்தைத் தள்ளிவைக்க ஆலோசனை கூறியது.

இந்த அரசு தன்னுடைய முந்தைய செயற்குறிப்புகளையும் அமைச்சகத்தின் ஒப்புதலையும் மீண்டும் வலியுறுத்தி மத்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தை செப்டம்பர் 1979-ல் கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய அரசின் வெளி விவகார அமைச்சகம் இவ்வரசின் செயற்குறிப்பை மறுபரிசீலனை செய்திருப்பதாகவும் தொழில் நுட்பக் குழு ஹாங்காங் மற்றும் சிங்கப்பூருக்குச் சென்று வருவது கைவிடப்படலாம் என்றும் கருத்துரை வழங்கியுள்ளது. அதனால்தான் தாமதம் ஏற்பட்டுள்ளது.

[முற்பகல் 9.10]

திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மயிலைத் தொகுதியில், சாந்தோம் பகுதியில் இப்படி பலமுறை கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனால் இரண்டாண்டுகளாக அங்கே போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. இதுகுறித்து நான் பலமுறை சொல்லியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனியாகிலும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்); பேரவைத் தலைவரவர்களே, அரசு அதை நல்ல முறையில் பரிசீலிக்கும்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் கூறியிருப்பது போல் திட்டங்கள் இருப்பது என்பதை நன்றியுணர்வோடு நான் ஒப்புக் கொண்டாலும், இத்தகைய திட்டங்களுக்கு அதிக அளவிலே நிதியினை ஒதுக்கி நிறைவேற்றினாலொழிய அந்தப் பகுதிகள் சீர் அடையாது என்பது என்னுடைய கருத்து. ஆகவே அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்); பேரவைத் தலைவரவர்களே, நிரந்தரமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள பூண்டியிலுள்ள நில மற்றும் நீரியல் ஆராய்ச்சி நிலையம் ''மாதிரி ஆய்வுகளை'' மேற்கொண்டு வருகிறது. அதற்கு அரசு பணம் ஒதுக்கியுள்ளது. அதனுடைய ரிசல்ட் வந்தவுடன் எந்த முறையில் தேவையான நடைமுறைகளைக் கையாள வேண்டுமோ அதனை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.